Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 169/2024 PW-1**

Name : நித்தியபிரகாஷ்
Father / Husband name : மணிவண்ணன்
Village : அகூர்
Age : 36
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 12.12.2025

A1 present. A2, A3 absent. Petition u/s 317 CrPC filed and allowed. APP present.
E Summon not served Lw1 to Lw3 present in counter case CC 206/2024.

**முதல் விசாரணை**

நான் புரோகிதம் வேலை செய்கிறேன். சாட்சிகள் தமிழ்மணி, விஜயக்குமார் ஆகியோர்கள் எனது ஊரை சேர்ந்தவர்கள். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 08.07.2023 அன்று காலை 11 மணியளவில் நான் எனது வயலை உழுவதற்காக நானும் டிராக்டர் ஓட்டுநர் தமிழ்மணி, விஜயக்குமார் ஆகியோர்கள் சென்றோம். அப்போது எங்கள் நிலத்தின் வழிப்பாதையில் எதிரி காந்திமதி படுத்துக்கொண்டு எனது அப்பாவிற்கும் 1வது எதிரிக்கும் வழிசம்மந்தமாக பிரச்சனை இருந்ததால் எனது அப்பா மட்டும் தான் எங்கள் நிலத்திற்கு செல்லவேண்டும், நான் செல்லக்கூடாது என்று வழிப்பாதையில் முடியை கலைத்துவிட்டு, சேலையை கலைத்துவிட்டு அலங்கோளமாக படுத்துக்கொண்டார். அப்போது 1வது எதிரியும், அவரின் மகனும் அங்கு வந்து எதிரிகள் மூன்றுபேரும் சேர்ந்துகொண்டு என்னையும், தமிழ்மணி, விஜயக்குமார் ஆகியோர்களை போங்கடா தேவிடியா பசங்களா என்றும், இனிமேல் நிலத்திற்கு வந்தால் பெட்ரோல் ஊற்றி கொளுத்திவிடுவேன் என்று மிரட்டினார்கள். பின்னர் சம்பவம் குறித்து ரோசணை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது

தான்,அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **சாட்சியின் கையொப்பத்துடன் கூடிய புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

**Sd/ M.Elavarasi,**
**Judicial Magistrate No.I, Tindivanam**

# Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 169/2024      PW-2**

Name : தமிழ்மணி
Father / Husband name : ராமலிங்கம்
Village : அகூர்
Age : 45
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 12.12.2025

A1 present. A2, A3 absent. Petition u/s 317 CrPC filed and allowed. APP present.
E Summon not served Lw1 to Lw3 present in counter case CC 206/2024.

**<u>முதல் விசாரணை</u>**

நான் டிராக்டர் வைத்து விவசாய வேலை செய்கிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். சாட்சி விஜயக்குமார் என்பவரை தெரியும் வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது. கடந்த 08.07.2023 அன்று அ.சா.1 டிராக்டரை அவரின் நிலத்தின் உழுவதற்காக எடுத்துவரச்சொன்னார். அதன்பேரில் நான் காலை 11.30மணியளவில் அவரின் கழனியில் டிராக்டர் ஓட்டிக்கொண்டிருந்தேன், அப்போது என்னுடன் அ.சா.1 ம் சாட்சி விஜயக்குமாரும் இருந்தார்கள். அப்போது ஒரு பெண் வந்து டிராக்டரை வழிமறித்து டிராக்டரின் டயர் கீழே படுத்துக்கொண்டார். அசிங்மாகபேசி, எனது வண்டியை பெட்ரோல் ஊற்றி கொளுத்திவிடுவேன் என்று சொல்லி அடிக்கவந்தார்கள். அப்போது ஆஜர் எதிரியும், அவருடன் இன்னும் ஒருவரும் இருந்தார்கள். அவர்கள் பெயர் எனக்கு தெரியும், அவர்களை எனக்கு தெரியும், பார்த்தால் அடையாளம் சொல்லுவேன்.

எதிரிகளை அடையாளம் காட்டுவதற்காக அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி முதல்விசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

**Sd/ M.Elavarasi,**
**Judicial Magistrate No.I, Tindivanam**